கேரள மாநிலத்தில் துணை முதலமைச்சரின் உரைவீச்சு!

# மாநில சுயாட்சி கோட்பாட்டிற்குப் புத்துணர்ச்சியை உருவாக்கி சாதனை!



கேரள மாநிலம் கோழிக்கோட்டில் மலையாள மனோரமா குழுமத்தின் சார்பில் 2.11.2024ஆம் நாள் நடைபெற்ற கலை மற்றும் இலக்கிய திருவிழா நிகழ்ச்சியில் கலந்து கொண்டு "திராவிட இயக்க அரசியலில் இலக்கியம் மற்றும் மொழியியலின் தாக்கம்" என்றதலைப்பில்தமிழ்நாட்டின் துணை முதலமைச்சரும், திராவிட முன்னேற்றக் கழக இளைஞரணிச் செயலாளரு மான உதயநிதி ஸ்டாலின் அவர்கள் உரையாற்றியுள்ளார் என்பது செய்தி.

ஆனால், அந்த உரையின் கருத்துக்கள் உருவாக்கிய தாக்கமும், திசைவழியும், தனித்தன்மை வாய்ந்ததாகும். திராவிட இயக்கத்தின் மொழியியல் கருத்துகளையும் நிலைப்பாட்டையும் எடுத்து அவைமுன் வைக்கும் பொழுது, இன்றைய அரசியல் சூழ்நிலையில் திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய மொழி வழி மாநிலப் பகுதிகள் விழிப்புணர்ச்சியுடனும், எச்சரிக்கையுடனும் இருக்க வேண்டிய அவசியத்தை மிகச் சிறப்பாக மாற்றுக் கருத்துள்ளவர்களும் ஆர்வத்தோடும், அக்கறையுடனும் கேட்கும் வண்ணம் எடுத்து விளக்கிய பாங்கும், பக்குவமும், பேரறிஞர் அண்ணா, முத்தமிழறிஞர் கலைஞர் ஆகியவர்களின் பேருரைகளின் எதிரொலியின் இன்றைய தொடக்கமாகவே மதிப்பீடு செய்யலாம்.

சமஸ்கிருத மொழியின் ஆதிக்கம் உச்சம் பெற்றிருந்த காலத்தில், அன்றைய தமிழ் மொழியில், சமஸ்கிருத மொழியின் ஊடுருவலால் உருவான கிளைமொழிகள் தான் கன்னடம், தெலுங்கு, துளு, மலையாளம் என்ற மொழிக் குடும்பமாகும். இதற்கான பல்வேறு சான்றாவணங்களும், தரவுகளும் அறிவியல் அடிப்படையிலான ஒப்பீடுகளும் உண்டு என்பதைச் சுட்டிக்காட்டியுள்ளார்.

எடுத்துக்காட்டாக தமிழ்நாட்டில் ஒரு காலக்கட்டத்தில் மருத்துவப் படிப்பு வேண்டுமெனில் தமிழ்நாட்டில் சமஸ்கிருதம் கற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிலை இருந்தது என்பதை யாராலும் மறுக்கவேவியலாது. மருத்துவப் படிப்பிற்கும் சமஸ்கிருத மொழிக்கும் என்ன தொடர்பு? ஆதிக்க உணர்வுதான்! எவ்விதத் தொடர்பும் இல்லாத சமஸ்கிருத மொழியை மருத்துவப் படிப்புடன் தொடர்புப்படுத்தியது நயவஞ்சக செயலாகும். அதுமட்டுமல்ல அதில் மொழித் திணிப்பு என்ற நோக்கம் மட்டுமல்ல, சாதாரண, ஏழை எளிய கிராமப்புற இளைஞர்களுக்கு மருத்துவக் கல்வி என்பது எட்டாக் கனியாக என்றும் இருக்க வேண்டும் என்ற நச்சு எண்ணத்தையும் உள்ளடக்கியது என்பதை திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மக்கள் புரிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய காலக்கட்டத்தில் பாரதீய ஜனதாக் கட்சியின் ஆட்சி ஒன்றிய அளவில் எத்தகைய முழக்கங்களை முன் வைத்து அதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளை உருவாக்கிக் கொண்டிருக்கிறது என்பதை திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மக்கள் புரிந்துகொள்ள வேண்டும். "ஒரே நாடு", "ஒரே மொழி", "ஒரே தேர்தல்" என்பதுதான் ஒன்றிய அரசின் இன்றைய முழக்கங்கள் மட்டுமல்ல, அதற்கான அடிப்படைக் கட்டமைப்புகளையும் திட்டமிட்டு உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். அவர்களது இந்த திட்டம் காலப்போக்கில் நமது மொழி இன அடையாளங்களை அழித்துவிடும் என்பதில் ஐயமில்லை. அதுமட்டுமல்ல, ஒன்றிய அரசின் இந்த திட்டம் நடைமுறைச் சாத்தியமில்லாத அவர்களது அபிலாசைகளின் வெளிப்பாடுதான்!!

தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் இந்தித் திணிப்பை எதிர்த்து நடத்திய போராட்டங்கள், அதன் மூலம் இழந்த உயிர் இழப்புகள் என்பது அளவிட முடியாததாகும். அத்தகைய தியாக வேள்வியின் மூலம்தான் திராவிட இயக்கம் தமிழ்நாட்டில் இருமொழிக் கொள்கையை உறுதிப்படுத்தியது ஆம்! இந்தித் திணிப்பைத் தடுத்து நிறுத்தியது. இதன் மூலம், இந்திய ஒன்றியத்தில் உள்ள மற்றைய மாநிலங்கள் தங்களது தாய்மொழிகளை வளர்த்துக் கொள்வதற்கும், வளம் சேர்ப்பதற்கும் தமிழ்நாட்டில் திராவிட இயக்கம் எடுத்துக் கொண்ட நடவடிக்கைகள், வழித்தடம் அமைத்துக் கொடுத்திருக்கிறது எனத் தன் உரையில் சுட்டிக்காட்டியதோடு, அதற்கான எடுத்துக்காட்டாக திராவிடப்பகுதியின் கலைத்துறை வளர்ச்சியைச் சுட்டிக்காட்டுகிறார்.

தமிழ்நாடு, கேரளம், கர்நாடகம், ஆந்திரம் ஆகிய திராவிடப் பகுதிகளில், தங்கள் தங்கள் தாய்மொழிகளில் திரைப்படங்கள் உருவாக்கி மிகப்பெரிய வெற்றியைக் கண்டுள்ளார்கள். ஆனால், அந்த நிலைமை வடமாநிலங்களில் இல்லை என்பதையும் ஆதாரங்களுடன் எடுத்து வைத்து தொடர்புடைய மக்களை சிந்திக்க வைக்கத் தூண்டுகோலாக தன் உரையை வடிவமைத்து கொள்கிறார்.

திராவிட இயக்கம் என்பது தமிழ்மொழி, கலாச்சாரப் பெருமைகள் ஆகியவற்றை சிதையாமல் பாதுகாப்பது மட்டுமல்ல; தமிழ் இலக்கியத்தின் மூலம், பகுத்தறிவையும், அறிவியல் சிந்தனைகளையும் வழிகாட்டும் நெறிகளாக முன்னிறுத்தினர். திராவிட இயக்கத்தின் பணி தொடங்குவதற்கு முன்னர் தமிழ்நாட்டில் பக்தி இலக்கியங்கள்தான் மக்கள் மத்தியில் ஆதிக்கம் பெற்றிருந்தது. ஆனால், திராவிட இயக்கத் தலைவர்கள்தான் தொல்காப்பியம், திருக்குறள், சிலப்பதிகாரம், அகநானூறு, புறநானூறு என்ற தொன்மையான நூல்களின் கருத்துக்களை, மக்களின் சிந்தனைக்கு முன்வைத்து, தமிழ் மக்களின் தொன்மையான கலை, கலாச்சாரம், அறிவியல் பூர்வமான சிந்தனைகளுக்கு வழித்தடம் அமைத்துத் தந்தார்கள் என்பதையும் தன் உரையில் முத்தாய்ப்பாய்ச் சுட்டிக் காட்டுகிறார்.



**பொன். முத்துராமலிங்கம்**
முன்னாள் அமைச்சர்,
கழக உயர்நிலை செயல்
திட்டக்குழு உறுப்பினர்

திராவிட மொழிக் குடும்பத்தைச் சார்ந்த மாநில மக்கள் தங்களின் மொழி, கலாச்சாரம் ஆகிய அடையாளங்களைக் காப்பாற்றியாக வேண்டும்! இந்த அடிப்படை முயற்சியையும், முன்னெடுப்புகளையும் தடுக்கும் முயற்சியாகத்தான் ஒன்றிய அரசு பல்வேறு சட்டங்களையும், திட்டங்களை யும் உருவாக்கி, திராவிட மொழிக் குடும்பத்தின் தனித்தன்மைகளை சிதறடைத்துச் சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளது. அந்த முயற்சியின் ஒரு படிக்கட்டுத்தான் புதிய கல்விக் கொள்கை/ இந்த புதிய கல்விக் கொள்கை திராவிட மொழிக் குடும்பத்தின் தனித் தன்மைகளை சீர்குலைக்கும் முயற்சி என்பதையும் சுட்டிக்காட்டி ஓர் தெளிவான புரிதலை தன்னுடைய உரையின் மூலம் உருவாக்கியிருக்கிறார் நமது தமிழ்நாட்டின் துணை முதலமைச்சர்.

தமிழ்நாடு துணை முதலமைச்சர் உரையின் தனித்துவமானது எதுவெனில் தன்முன் அமர்ந்திருப்போரையும், உரையை அச்சு ஊடகங்கள், மின் ஊடகங்கள் மூலம் முறையே படிப்பவர்களையும், கேட்பவர்களையும் சிந்திக்கத் தூண்டும் அளவிற்கு உள்ளத்தின் உணர்வுகளை தொட்டுத் தொடங்கி, மென்மையாக வாதங்களை தரவுகளோடு முன்வைத்திருப்பது நிச்சயம் அதிர்வலைகளை உருவாக்கும் என்பதில் ஐயமில்லை. அண்டை மாநிலங்களான கேரளாவில் திராவிடக் கருத்தியலை பக்குவமாய் பதிவுசெய்த தமிழ்நாட்டின் துணை முதல்வரை வரலாறு பாராட்டும்.

வாழ்க வளர்க
துணை முதல்வரின் பணியும் பயணமும்!

பார்வையாளர் பங்கேற்கும்

# தென்காசி சட்டமன்றத் தொகுதி கூட்டம்!

## மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன் தலைமை!

தென்காசி, நவ.6-

கழகத் தலைவர்-முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க தென்காசி தெற்கு மாவட்டத்திற்கு உட்பட்ட தென்காசி சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் கலந்து கொள்ளும் ஆலோசனைக் கூட்டம் இன்று (06.11.2024 புதன்கிழமை) தென்காசி சிவந்தி நகர் தெற்கு மாவட்ட கழக அலுவலகத்தில் உள்ள கலைஞர் அறிவாலயத்தில் நடைபெறுகிறது.என தென்காசி தெற்கு மாவட்ட பொறுப்பாளர் வே.ஜெயபாலன் அறிக்கை வெளியிட்டுள்ளார். இது பற்றி அவர் அறிக்கையில் தெரிவித்திருப்பதாவது.

தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க அலுவலகத்தில் (எனது தலைமையில்) இன்று (6ம் தேதி) மாலை 3 மணி அளவில் தென்காசி தொகுதி பார்வையாளர் மாநில மருத்துவர் அணி துணைச் செயலாளர் மருத்துவர் கலைகதிரவன் பங்கேற்று ஆலோசனைகளை வழங்க உள்ளார்.

ஆகவே அந்தந்த தொகுதிக்கு உட்பட்ட மாநில, மாவட்ட நிர்வாகிகள், ஒன்றிய, நகர,பேரூர்,கழகச் செயலாளர்கள், மாவட்ட சார்பு அணி அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள்,(BLA2) வாக்குச்சாவடி நிலை முகவர்கள் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பொருள்: பாக முகவர்கள் கலந்தாய்வு,வாக்காளர் பட்டியல் சரிபார்ப்பு சம்பந்தமாக. கழக ஆக்கப் பணிகள்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.



முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்களின் வேண்டுகோளுக்கு இணங்க சட்டப்பேரவைத் தலைவர் மு.அப்பாவு அவர்கள் வழிகாட்டுதலின்படி பஹ்ரைன் சிறையில் அடைக்கப்பட்டுள்ள நெல்லை மாவட்டம் இராதாபுரம் தொகுதி இடிந்தகரையை சேர்ந்த 28 மீனவர்கள் குடும்பத்தினருக்கு நிவாரண உதவி மற்றும் உணவுப் பொருட்களை நெல்லை கிழக்கு மாவட்ட மாணவர் அணி அமைப்பாளர் அலெக்ஸ் அப்பாவு வழங்கினார். உடன் மாவட்ட ஊராட்சி மன்ற குழு தலைவர் ஜெகதீஸ்,தொகுதி பார்வையாளர் சிவராஜ்,ஒன்றிய செயலாளர் ஜோசப் பெல்சி,மாவட்ட ஊராட்சி உறுப்பினர் பாஸ்கர், பங்குத்தந்தை சதீஷ் உள்பட பலர் உள்ளனர்.

# மதுரை வடக்கு : சட்டமன்றத் தொகுதி - ஒன்றிய நகர - பேரூர் - பகுதி கழக BLA-2 கூட்டம்!

## மாவட்டச் செயலாளர் - அமைச்சர் பி.மூர்த்தி அறிவிப்பு!



### மதுரை கிழக்கு சட்டமன்றத் தொகுதி - ஒன்றிய / பகுதி கழக BLA-2 கூட்டம்

06.11.2024 - புதன்கிழமை

| வ. எண் | ஒன்றியம் / பகுதி | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | மதுரை மேற்கு வடக்கு | 10.00 AM | குறிஞ்சி மஹால், திருப்பாலை |
| 2 | கண்ணனேந்தல் பகுதி | 11.00 AM | வட்டக் கழக அலுவலகம், பரசுராமன்பட்டி |
| 3 | மதுரை கிழக்கு | 03.00 PM | மந்தை திடல், ராஜகம்பீரம் |
| 4 | மதுரை கிழக்கு தெற்கு | 04.00 PM | தேவி பேலஸ், கருப்பாயூரணி |
| 5 | வண்டியூர் | 05.00 PM | பங்குனி உத்திரம் மஹால், வண்டியூர் |
| 6 | மதுரை கிழக்கு வடக்கு | 06.00 PM | சாரா மினி மஹால், ஒத்தக்கடை |
| 7 | திருப்பாலை | 07.00 PM | மாவட்டக் கழக அலுவலகம், சர்ச் ரோடு, அய்யர்பங்களா. |
| 8 | ஆனையூர் | 07.45 PM | ஐஸ்வர்யா மஹால், கூடல்புதூர், ஆனையூர். |

### சோழவந்தான் சட்டமன்றத் தொகுதி - ஒன்றிய/ பேரூர் கழக BLA-2 கூட்டம்

06.11.2024 - புதன்கிழமை

| வ. எண் | ஒன்றியம் / பேரூர் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | வாடிப்பட்டி வடக்கு | 10.00 AM | ஒன்றியக் கழக அலுவலகம், வாடிப்பட்டி |
| 2 | வாடிப்பட்டி பேரூர் | 11.00 AM | பேருந்து நிலையம் அருகில், வாடிப்பட்டி |
| 3 | சோழவந்தான் பேரூர் | 12.00 AM | சந்திரன் மஹால், சோழவந்தான். |
| 4 | வாடிப்பட்டி தெற்கு | 12.30 PM | திருவேடகம் தண்ணீர் பிளாண்ட். அருகில் |
| 5 | மதுரை மேற்கு | 01.30 PM | பாசிங்காபுரம் |
| 6 | அலங்காநல்லூர் கிழக்கு | 05.00 PM | ஒன்றியக் கழக அலுவலகம், கேட்டுக்கடை அலங்காநல்லூர் |
| 7 | அலங்காநல்லூர் பேரூர் | 05.30 PM | ஒன்றியக் கழக அலுவலகம், கேட்டுக்கடை அலங்காநல்லூர் |
| 8 | அலங்காநல்லூர் மேற்கு | 06.00 PM | ஒன்றியக் கழக அலுவலகம், கேட்டுக்கடை அலங்காநல்லூர் |
| 9 | பாலமேடு பேரூர் | 06.30 PM | ஒன்றியக் கழக அலுவலகம், கேட்டுக்கடை அலங்காநல்லூர் |

### மேலூர் சட்டமன்ற தொகுதி - ஒன்றியம் / நகரம் / பேரூர் BLA-2 கூட்டம்

06.11.2024 - புதன்கிழமை

| வ. எண் | ஒன்றியம் / பேரூர் / நகரம் | நேரம் | இடம் |
|---|---|---|---|
| 1 | கொட்டாம்பட்டி தெற்கு | 10.00 AM | மேலூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம், மேலூர் நகரம் |
| 2 | கொட்டாம்பட்டி கிழக்கு | 11.00 AM | ஒன்றியக் கழக அலுவலகம், கொட்டாம்பட்டி |
| 3 | கொட்டாம்பட்டி மேற்கு | 12.00 PM | மணப்பச்சேரி ஊராட்சி, வெள்ளாலப்பட்டி |
| 4 | மேலூர் கிழக்கு | 05.00 PM | மேலூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம், மேலூர் நகரம் |
| 5 | மேலூர் வடக்கு | 05.30 PM | மேலூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம், மேலூர் நகரம் |
| 6 | அ.வள்ளாலபட்டி | 05.45 PM | மேலூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம், மேலூர் நகரம் |
| 7 | மேலூர் தெற்கு | 06.00 PM | மேலூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம், மேலூர் நகரம் |
| 8 | மேலூர் நகரம் | 06.30 PM | மேலூர் சட்டமன்றத் தொகுதி அலுவலகம், மேலூர் நகரம் |

**அமைச்சர் பி.மூர்த்தி**
செயலாளர், மதுரை வடக்கு மாவட்ட தி.மு.க.




இராமநாதபுரம் மற்றும் பரமக்குடி சட்டமன்றத் தொகுதி பாக முகவர்கள் பூத் கமிட்டி கூட்டம் மாவட்டக் கழகச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ, தலைமையில் நடைபெற்றது. பரமக்குடி சட்டமன்ற தொகுதி பாக முகவர்கள் (BLA2) பூத் கமிட்டி உறுப்பினர்கள் (BLC) கூட்டம் பரமக்குடி ஏ.பி.சா மஹாலில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பரமக்குடி சட்டமன்ற உறுப்பினர் செ.முருகேசன் மற்றும் பரமக்குடி சட்டமன்ற தொகுதி பார்வையாளர் மாநில விவசாய தொழிலாளர் அணி துணைச் செயலாளர் கொடி சந்திரசேகர், கலந்து கொண்டு முன்னிலை வகித்தார்கள் மேலும் முன்னாள் அமைச்சர் டாக்டர் எஸ்.சுந்தர்ராஜன், முன்னாள் மாவட்ட கழகச் செயலாளர் சுப.த.திவாகரன் மற்றும் நகர் மன்ற தலைவர் சேது கருணாநிதி, நகர் செயலாளர் ஜீவரத்தினம், ஒன்றிய செயலாளர்கள் வி.வாசுதேவன், ஜெயக்குமார், கிருஷ்ணமூர்த்தி, சக்தி, அண்ணாமலை, கதிரவன், குணசேகரன், உட்பட பேரூர் கழக செயலாளர் நகர் மன்ற உறுப்பினர்கள் கழக நிர்வாகிகள் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.




நெல்லை மாநகர தி.மு.க.சார்பில் செயல்வீரர்கள் கூட்டம் மற்றும் நெல்லை,பாளை தொகுதி பார்வையாளர் அறிமுக கூட்டம் தச்சநல்லூர் ஜி.வி. மகாலில் மாநகர செயலாளர் சு.சுப்பிரமணியன் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் நெல்லை தொகுதி பார்வையாளர் மாநில வர்த்தக அணி இணைச் செயலாளர் ச.முத்துச்செல்வி பங்கேற்று உரையாற்றினார். உடன் பாளை தொகுதி பார்வையாளர் மாநில நெசவாளர் அணி துணைச் செயலாளர் வசந்தம் ஜெயக்குமார், அவைத்தலைவர் முருகன், மாநில நெசவாளர் அணி செயலாளர் சொ.பெருமாள், பகுதி செயலாளர்கள் பூ.சுப்பிரமணியன், நமச்சிவாயம், அன்டன் செல்லத்துரை மற்றும் அப்துல் கையூம், வில்சன் மணித்துரை அலிஃப் மீரான், இனியன் உள்பட பலர் உள்ளனர்.



சிவகங்கையில் நடைபெற்ற வடக்கு ஒன்றிய கழக பாகமுகவர்கள் கூட்டத்தில் ஒன்றிய செயலாளர் திருமலை முத்துராமலிங்கம் பேசினார். உடன் சிவகங்கை சட்டமன்றத் தொகுதி பார்வையாளர் புதுக்கோட்டை மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் க.சண்முகம், சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளர் மேயர் எஸ்.முத்துதுரை, அவைத்தலைவர் பால்சாமி, மாவட்ட மகளீரணி அமைப்பாளர் திருமதிபவானிகணேசன் ஆகியோர் உள்ளார்கள்.